திருவர் தபசு.

ஆர்யதர்மம்.

புத். 3.
ஸஞ். 10.

பிங்கள௵ மாக சுத்தபஞ்சமி.

வியாஸாசலீயம்,

(முன்தொடர்ச்சி.)

त्यजति च स्म फलादिकमेकदा मुनिरयं दिवसान्तर एति तत् ।
अथ ततः प्रतिमासमुपाददे प्रतिसमं तदपाकृत सर्वदा ॥ २२ ॥

இம்முனியானவர் தபசு செய்யுங்கால் ஒவ்வொரு தினமும் செய்யும் பல மூலாதிகளான ஆகாரங்களை விட்டுச் சில தினங்கள் ஆகாரமின்றியில் பிறகு ஒரு சமயம் ஆகாரம் செய்கின்றவராயும் அதற்குப் பிறகு ஒரு மாசம் ஆகாரம் ஒரு வருஷம் சென்று ஆகாரம் என்று இவ்விதமாகப் பழக்கம் பண்ணி முடிவில் ஆகாரத்தை விலக்கி விட்டார்.

अपि जलेन पुरोदितवर्त्मना मुनिरवर्तत योगबलेन सः ।
अथ भुजङ्गमवृत्तिरभून्मुनिः खजलदामृतसेवनतत्परः ॥ २३ ॥

அதற்குப் பிறகு யோக பலத்தினால் ஜலத்தை ஆகாரமாகக் கொண்டு அற்ப காலமும் பிறகு வாயுவினாலும் பிறகு மேக வர்ஷமாகிற அமிருதத்தை யுண்டியாகக் கொண்டார்.

अथ जपं विरच्य्य समाधिना शिवमुपासितुमारभतोत्तमः ।
करपदादियुतं तरुणेन्दुकं भसितभासितमुज्वलभूषणम् ॥ २४ ॥

இவ்வித நியமத்துடன் சில காலம் ஜபம் செய்து கைகால் முதலிய அவயவங்களுடன் கூடியவராயும் சந்திரசேகரராயும் விபூதியாலும் மற்றுமுள்ள ஆபரணங்களாலும் விளங்கும் பரமசிவனைச் சிரேஷ்டரான துருவரானவர் ஸமாதியினால் உபாசிப்பதற்கு ஆரம்பித்தார்:

दधतमूर्ध्वयुगे परशुं मृगं वरमभीतिमधस्तनदोर्युगे ।
विशदवर्णमहाम्बुजविष्टरं परिहितं मृगभक्षकचर्मणा ॥ २५ ॥

स्मितविकासिमुखांभुजशोभिनं रविहुताशनिशाकरलोचनम् ।
विदधतं प्रभया तिमिरादिशोगरलकलिमभासितकन्धरम् ॥ २६ ॥

वसुमतीगतमेकपदं व्यधादपरमूर्ध्वगतं प्रविधाय सः ।
दिनकरे नयने समुपास्त तं शिवमथोद्धृतदोर्युगलः शिशुः ॥ २७ ॥

உயரவிளங்கு மிருகரங்களிலும் பரசு மான் இவைகளையும் கீழிருக்குமிரண்டுகைகளிலும் வரம் அபீதி என்கிற இரண்டையுமுடையவராயும் வெண்தாமரையை ஆசனமாகக் கொண்டவரும் புலித் தோலை வஸ்திரமாகவணிந்தவரும் மந்தகாசத்தால் விளங்கும் முகத்தை யுடையவரும் சூரியன், சந்திரன், அக்னி இவர்களை நேத்திரமாகத் தரிப்பவரும் கழுத்தில் பிரகாசிக்கும் காளகூடமென்கிற விஷத்தின் காந்தியால் திக்குக்களை இருள் மூடியதாகச் செய்பவருமாகிய ஸ்ரீ பரமேசுவரனை ஒரு பாதத்தைப் பூமியில் வைத்தும் மற்றொன்றை தூக்கிக்கொண்டும் இரு கரங்களையும் தொங்கவிட்டு சூரியனிடம் வைக்கப்பட்ட

நேத்திரங்களுடனிருக்கும் அந்தச் சிசு முனியானவர் தன் ஹிருதயத்தில் தியானம் செய்தார்.

स शिशुरत्यशयिष्ट तपश्चरान्मुनिजनांस्तपसापि पुरातनान् ।
मुनिजना अपि वीक्ष्य तपश्चरास्तपसि निष्ठितमेत्य सुविस्मताः ॥ २८ ॥

சிறு வயதிலிருக்கும் அம்முனியானவர், வெகு காலமாய்த் தவம் செய்யும் விருத்தர்களான முனிவர்களைக் கூடத் தம் தபஸால் அதிக்கிரமித்து விட்டார். அங்கு இருக்கும் முனிவர்களும் இவரைப் பார்த்துத் தவத்தாற் சிறந்தவரென்று மிகவும் ஆச்சிரியப்பட்டார்கள்

उदितवत्तनुतोऽस्य महामहस्तदु जगत्रयमूर्जितमानशे ।
प्रतिहतांग्यगुरूर्ध्वमधोमुखा दिनकरस्य करा मुनितेजसा ॥ २९ ॥

உபமன்யு முனியினுடைய சரீரத்தில் இருந்து முண்டான சிறந்த தேஜஸானது மூன்றுலகங்களையும் பிரகாசிக்கும்படி செய்தது. இவரது தேயுளால் உயரப்போக முடியாமல் தடுக்கப்பட்டவையாய்க் கொண்டு ரவியின் கிரணங்கள் கீழ் நோக்கிச் சென்றன.

वसुमती नमति स्म च तद्दिशि न्यधितपादतलं तु स यद्दिशि ।
नगनदीवनवारिधिसंहितं हरिहयः श्रुतवानिदमद्भुतम् ॥ ३० ॥

அந்த முனியானவர் எந்தத் திக்கில் தன் சரணங்களை வைக்கின்றாரோ அத்திக்கிலிருக்கும் பூமியானது இவருக்கு வணங்கிற்று என்று மலை, நதி, வனம், சமுத்திரம் இவைகளால் கூறப்பட்ட ஆச்சிரியமான இந்தச் சமாசாரத்தைக் கேட்டான்.

स च बिभाय भृशं मुनिपुत्रकादतिसुरासुरकर्मणि निष्ठितात् ।
समभिचिन्त्य तपश्चरति ह्यसौ मम पदं प्रतिलिप्सुरुतादरम् ॥ ३१ ॥

தேவர்கள் அசுரர்கள் இவர்களால் செய்ய முடியாத சிரேஷ்டமான கர்மாவில் பற்றுதலை யடைந்திருக்கும் இந்த முனியினிடமிருந்தும் நம்முடைய ஸ்தானமான

சுவர்க்கத்தை யடைவதற்காக இவர் இவ்விதம் தவம் செய்கிறாரென்று இந்திரன் மிகவும் பயந்தான்.

हरिहयोऽप्सरसाङ्गणमब्रवीद्व्रजत यत्र मुनिस्तपमाचरत् ।
वसति तत्र जगत्रयमीदृशं सुचकितं चकितैणदृशोबलाः ॥ ३२ ॥

உடனே இந்திரன் இவர் தவத்திற் கிடையூறு செய்யக் கருதி பயந்தமான்களின் நேத்திரம் போன்ற நேத்திரங்களை யுடைய ஹே அபலைகளே என்று அப்ஸர ஸ்திரீகளை ஸம்போதனஞ் செய்து உபமந்யு என்கிற முனி எந்த இடத்தில் தவம் புரிகின்றாரோ அங்கு நீங்கள் செல்லுங்கள். பிரசித்தமான மூவுலகங்களும் மிகவும் பயந்ததாய்க் கொண்டு அந்த விடத்திலேயே இருக்கின்றன. சீக்கிரம் சென்று அவர் தவத்திற்கு விக்கினம் செய்யுங்களென்று ஏவினன்.

ஒரு சம்பாஷணை.

பாலசந்திர தீக்ஷிதருக்கும் சுமுதாகர சாஸ்திரிகளுக்கும் நடந்தது.

(முன்தொடர்ச்சி.)

பாலசந்திர தீக்ஷிதர்—என்ன சந்தோஷப்படுகிறீர். தந்திர சித்தமென்றல்லவோ என்னால் சொல்லப்பட்டிருக்கின்றது. உபநிஷதர்த்தத்தைச் சொல்லுகின்றதான கீதையினுடைய பாதவிபாகத்திற்கு அது எங்ஙனம் காரணமாக முடியும்? காயத்ரீ, கீதை இவ்விரண்டிற்கும் ஒன்றுக்கொன்று சம்பந்தமிருந்ததேயானல் நாலாவது பாதமென்று நினைப்பதற்காவது கொஞ்

சம் அவகாசம் கிடைக்கலாம். அவ்விதமான சம்பந்தம் கேட்கப்படவில்லை. பிரமாணமன்றியில் இவ்விதமங்கீகரிக்கப்படுகிறதென்றால் அதைப்பற்றி விசாரிக்கவே இடமில்லை. மிகவும் பிரயாசைப்பட்டு காயத்ரீமூலம் கீதைக்கு இருக்கு என்று ஸ்தாபித்தாலும் இதினால் உம் இஷ்டம் பூர்த்தியாகவில்லை. ஏனென்றால் காயத்ரீயானது வேதமூலமாக இருக்கையால் த்ரிபதா மூன்று பாதங்களோடு கூடியதென்றே சாஸ்திரங்களால் அங்கீகரிக்கப்படுகிறது. வேதமானது கர்மா, உபாசனை, ஞானம் என்ற மூன்று காண்ட சுவரூபமாயிருக்கின்றது. சங்கிரகமாய் அக்கருத்தைப் போதிக்கிற கீதா சாஸ்திரமும் கர்மா முதலான மூன்றுகாண்ட சுவரூபமென்று எங்களுக்கே அனுகூலமாயிருக்கிறது. காண்டம், பாதம் முதலியவைகளிலிருக்கிற வித்தியாசமான அபிப்பிராயமானது கேட்கப்பட்டது. இது நிற்க மற்று முள்ளதையறிவியும்.

குமுதாகர சாஸ்திரி—கேளுங்கள்; இந்த நவீன கீதையில் 26 அத்தியாயங்களேயன்றி 18 அத்தியாயங்களல்ல.

பா—கஷ்டம். இவ்விஷயத்திலும் சுத்த ஆரியர் என்று பெயர்கொண்ட அவர்கள்தாம் பிரமாணம்.

கு—இவ்விதம் கூறுவது சரியல்ல. இவ்விஷயத்தில் பல பிரமாணங்களிருக்கின்றன.

பா—அவை எவை?

கு—முதல் பிரமாணம், கோபிலகாரிகை அதானது 26 அத்தியாயங்களுக்கும் ஒவ்வொன்றினுடைய, அர்த்தங்களையும் ஸங்கிரகமாய்த் தெரிவிக்கின்றது.

பா—இவ்விஷயத்திற்காக ஏற்பட்ட அந்தக் காரிகைகள் அச்சிடப்பட்டிருக்கின்றனவா?

கு—நன்ருய் வெளியிடப்பட்டிருக்கின்றது.

பா—அப்படியானல் நீர் படியும்.

கு—அப்படியே படிக்கிறேன்.

शुद्धधर्ममण्डलस्य धर्मशास्त्रं सनातनम् ।
यच्च 'गीताभिधं तद्वै व्याख्यास्यामो यथामति ॥ १ ॥

श्रीकृष्णवदनाम्भोजगलिताशेषतापनुत् ।
गीता चकास्ति षड्विंशदध्यायैरन्विता परा ॥ २ ॥

आद्ये गीतावतारोऽयमध्याये परिकथ्यते ।
पूर्तिं समेष्यति स्वात्तसंकल्पे कर्म चक्रतुः ॥ ३ ॥

स्वप्रधानपरं शुद्धं नरनारायणौ प्रभू ।
शुद्धसंकल्पनाथौ च तन्निबोधत वै जनाः ॥ ४ ॥

प्रारब्धे भारते युद्धे कृष्णो नारायणो विभुः ।
कार्यदर्शिनमाराध्यं नरं स्वांशं तथार्जुनम् ॥ ५ ॥

आहूय पूर्वं तां ब्राह्मीं शक्तिं तस्मै समादिशत् ।
यां हि लोकास्तदीयाश्च प्राप्य स्वार्थप्रसादतः ॥ ६ ॥

व्यवसायं प्रकुर्वन्ति स्वकीयं सफलं भुवि ।
द्विविधं च परा ब्राह्मी सा नाना परिकथ्यते ॥ ७ ॥

सर्वेषां कर्मणां सैव जीवभूता चकास्ति हि ।
द्विधाभूतस्तया शक्त्या निवृत्तेश्च प्रवृत्तितः ॥ ८ ॥

दैवी शक्तिं निवृत्तश्च प्रवृत्तश्चासुरीं तथा ।
आदधानश्च पार्थोऽयं लोकप्रतिनिधिर्गुरुः ॥ ९ ॥

लोकानां च सुखं दुःखं सांसारिकमवेक्ष्य हि ।
कृपया परयाविष्टः शिष्यलक्षणलक्षितः ॥ १० ॥

जिज्ञासुस्तन्निवृत्तेश्च ह्युपायं योगशास्त्रतः ।
शुद्धसंकल्पनाथं च कृष्णं तं शरणं ययौ ॥ ११ ॥

இவ்விதம் கீதார்த்த ஸங்கிரஹத்தினுடைய நான்காவது பக்கத்தில் எழுதப்பட்டிருக்கின்றது.

பா—ஆச்சரியம் கிரந்தம் எழுதக்கூடிய சக்தியானது மிகவும் மேன்மையாயிருக்கிறது. இவ்விதமாக ஓரிடத்திலும் கேட்கப்படவேயில்லை. இருக்கட்டும், இதின் கருத்தென்ன ?

கு—உம்முடைய சமீபத்திலிருந்தும் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றே வந்திருக்கிறேன்.

பா—இவ்விதமானால் நாமிரண்டுபேர்களும் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுவதுதான் கதி. மற்றுமுள்ள எல்லா அத்தியாயங்களுக்கும் எழுதப்பட்டிருக்கும் காரிகைகளும் இவ்விதமாகவே இருக்குமா ?

கு—இந்தக்காட்டிலும் சிலாக்கியங்களாகவே இருக்கின்றன. அவைகளையும் படிக்கட்டுமா ?

பா—போதும், போதும். காதுகளுக்கு உபத்திரவத்தை யுண்டுபண்ணுதே ? இந்தக் காரிகையை செய்தவர் யார் ? இந்தப் பிரமாணமானது சுத்தார்யர்களால் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அத்தியாயங்களின் பிரிவானது உசிதமாகயிருக்குமென்ற விஷயத்தில் வேறு சிலாக்கியமான பிரமாணமிருக்குமேயானால் அதையும் கேட்கிறோம்.

கு—இரண்டாவது பிரமாணம்:—

गीता गङ्गा च गायत्री गोविन्देति हृदि स्थिते ।
चतुर्गकारसंयुक्ते पुनर्जन्म न विद्यते ॥

பா—இந்த வசனமானது பாரதகோசங்களிலிருக்கின்றதா ?

கு—சில புஸ்தகங்களில் மாத்திரம் பார்க்கப்படுகின்றது.

பா—இந்தக் கீதையானது இருபத்தாறு அத்தியாமென்று பிரிவை யடைந்ததற்குப் பிரமாணம் என்ன?

கு—இவ்விஷயத்தில் எப்படி கங்கையானது கோவிந்தருடைய சரணத்திலிருந்தும் வெளி வந்ததோ, அவ்விதமிந்தக் கீதையும் காயத்ரீயிலிருந்தும் வெளிவந்ததாகையால். அதின் அக்ஷரங்களின் சங்கியையால் 24 அத்தியாயங்களாகப் பிரிவினையடையப்பெற்றது.

பா—இவ்வித அர்த்தமானது உன்னாலே ஊகிக்கப்பட்டதோ? அல்லது இன்னூலாசியராலோ?

கு—இதில் ஓரிடத்திலும் என் சொந்த அபிப்பிராயமாகக் கருத்துக் கூறப்படவில்லை. யாவும் இன்னூலை இயற்றியவருடையதே.

பா—இந்த சுலோகமானது எப்பிரகரணத்தில் காணப்படுகின்றது.

கு—கீதையின் மகிமையைக் கூறும் பிரகரணத்தில்

பா—அப்படியானால் இதற்குமுன் சுலோகம் உமக்கு ஞாபகமிருந்தால் அதையும் உரையும்.

கு—எல்லா சுலோகங்களையும் நன்கு அறிந்திருக்கிறேன் சொல்லுகிறேன் கேளும்.

गीतासुगीताकर्तव्या किमन्यैः शास्त्रसंग्रहैः ।
या स्वयं पद्मनाभस्य मुखपद्माद्विनिःसृता ।
सर्वशास्त्रमयी गीता सर्वदेवमयो हरिः ।
सर्वतीर्थमयी गीता सर्ववेदमयो मनुः ।
गीता गङ्गा च गायत्री गोविन्देति हृदि स्थिते ।
चतुर्गकारसंयुक्ते पुनर्जन्म न विद्यते । இவைகள் தாம்.

பா—இந்த சுலோகங்கள் முன் கேட்கப்பட்டவைகளே. பாரதத்திலிருக்கின்றன வென்பது சந்தேகப்பட்டத்

தருந்தது. கீதையைப் போற்றும் பல புராணங்களுள் எங்காகிலு மோரிடத்திலிருக்கலாம். இங்குக் கீதையானது காயத்திரியிலிருந்து வெளிவந்ததென்றும் 24 அத்தியாயங்களுடன் கூடியதென்றும் நீர் கொண்ட அபிப்பிராயமானது புலப்படவில்லை. ஆனால் கங்கையைப்போல் கீதையும் மிகவும் பரிசுத்தமானதென்று தெரிகின்றது. ஒன்றைப் போற்றுவதற்காகப் பிரஸித்தங்களாயும் உவமைக்குத் தகுதியாயுமிருக்கிற மற்றொன்றையும் கூடக் கூறுவது சாஸ்திரங்களின் சுபாவம். இதினால் கீதை காயத்ரீயிலிருந்து வெளிவந்ததென்றும் 24 அத்தியாயமென்றும் கூறும் உமது அபிப்பிராயம் எப்படி கிடைத்தது. விசாரிப்பதற்கு அர்ஹமில்லாத தவறான வார்த்தை இது. இங்ஙனமங்கீகரித்தாலும் இதினால் என்ன லாபம் கிடைக்கின்றது.

கு—எப்படி காயத்ரீயானது 24 அக்ஷரங்களுடையதோ, அவ்விதமே கீதையும் 24 அத்தியாயங்களுடையதென்று கிடைக்கின்றது.

பா.—ஓய், என்ன இது, மிகவும் விரோதமாய்ச் சொல்லப்படுகின்றதே.

கு—யாது விரோதம்.

பா—நீர் தெரிந்துகொள்ளவில்லையா? முதலில் கீதைக்குப் பாதங்களென்று கற்பிக்கும்பொழுது நான்கு பாதங்களை உடைய காயத்ரீ கீதைக்கு மூலமாகப் பிரதிக்ஞை செய்யப்பட்டது. அப்படியானால் 23 அக்ஷரங்களையுடையது காயத்ரீ என்கிற பக்ஷத்தில் கீதையும் 23 அத்தியாயங்களுள்ளதாக இருத்தல்வேண்டும். மூன்று பாதங்களையுடைய காயத்ரீயை மூலமாகக் கொண்டால் முற்கூறிய பிரதிஜ்ஞைக்கு விரோதமேற்படுகின்

றது. அதற்குப் பரிகாரம் கூறமுடியாது. இவ்விடத்திலோவெனில் கீழ் குறிப்பிட்ட இருவகையான அத்தியாய சங்கியைகளுமல்ல.

கு—உம்மால் கூறப்படும் விரோதம் ஏற்படும். ஆனாலும் முகவுரையில் காயத்ரீயானது ஒவ்வொரு பாதத்திலும் ஆறு அக்ஷரங்களையுடையது என்று காணப்படுகின்றது.

பா—இவ்விஷயத்தில் அந்த எழுத்துத்தான் பிரமாணமோ?

கு—ஐந்தாவது பக்கத்தில் எழுதியதுதான்.

गायत्री कामधेनुः स्यात्स्तनं षट्कचतुष्टयम् ।
गीतामृतं महादुग्धं दोग्धा नारायणः स्वयम् ॥
पार्थो दुग्धस्य भोक्तास्ति लोकप्रतिनिधिर्नरः ॥ १० ॥

என்கிற நாரத வசனமே பிரமாணமாகும்.

பா—இந்த நாரத வசனமானது சுத்தார்யர்களால் உண்டு பண்ணப்பட்டது. பெரியோர்களால் அங்கீகரிக்கப் பட்டிருக்குமேயாகில் சரியான பிரமாணத்தையறிவியும். நீர் பிறரை வஞ்சிக்கக் கூடியதான வாக்கியங்களை என் அடிக்கடி உதாஹரிக்கின்றீர்.

கு—வேறு பிரமாணமொன்றும் காணப்படவில்லை. இவ்விடத்தில் அதுதான் எழுதப்பட்டிருக்கின்றது.

பா—அப்படியானல் சரியான பிரமாணமில்லாததினலேயே காயத்ரீயை மூலமாகக்கொண்டது கீதை என்ற உம்முடைய வசனமானது தள்ளப்பட்டது. அன்றியும் காயத்ரீ 24 அக்ஷரங்களையுடையது. அந்த அக்ஷர சங்கியையை மூலமாகக்கொண்ட கீதையும் 26 அத்தியாயங்களோடுகூடியது என்கிற இவ்வசனமும் கூறுகிறவர்களுடைய சிறந்த பாண்டித்தியத்தை நன்கு வெளியாக்குகின்றது.

கு—பிரணவார்த்தத்தை நிரூபிப்பதற்காக ஆதியிலும் முடிவிலும் இரண்டு அத்தியாயங்களிருக்கின்றனவென்று இதற்குச் சமாதானம் முந்தியே கூறப்பட்டிருக்கின்றதே.

பா—காயத்ரீயை மூலமாகக்கொண்ட கீதையில் பிரணவாத்தியாயத்தை வெளியிடுவதற்கு என்ன காரணம்?

கு—பிரணவமன்றியில், காயத்ரீ ஜபிக்கப்படுகின்றதில்லை என்பதுதான்.

பா—அப்படியானால் நியாயமாய் வ்யாகிருதிகளும் காயத்ரீயோடுகூடவே ஜபிக்கப்படுகின்றன. அவைகளுக்காகச் சில அத்தியாயங்கள் ஏன் எழுதப்படவில்லை? ஒருகால் சுத்தாரியர்களால் வேறொரு சமயத்தில் சேர்க்கப்படப்போகின்றனவா, இல்லாவிடில் இவர்களுக்கு வேறான சுத்த காயத்ரீ இருப்பதால் வியாகிருதிகளோடுகூடிய காயத்ரீயானது ஜபிக்கப்படுகிறதில்லையா? இது போதும். வீண் கண்ட க்ஷேபமெதற்காக? வேறு சொல்லும்.

கு—கோபிலர், நாரதர் முதலியவர்களுடைய வசனமின்றி வேறு ஸ்பஷ்டமான சிறந்ததான பிரமாணமில்லை. அவ் வசனங்களே சொல்லப்படுகின்றன. நீர் கேட்டு அவைகளை உமது இஷ்டம்போல் அறிந்துகொள்ளும்.

பா—அவைகளையும் நான் கேட்கவேண்டுமோ? அப்படியானால் உரையும்.

கு—पुरा भगवता प्रोक्ता या गीता योगलक्षणा । என்று ஆரம்பித்து इत्यध्याये च षड्विंशे स्तुतं ब्रह्म परापरम् ॥ இதுவரையுமுள்ள முகவுரையில் 13-வது பக்கத்தில் அச்சிடப்பட்ட நாரதருடைய வசனங்கள் முதல் அத்தியாயத்திலும்

முடிவிலுள்ளதிலும் இருக்கும் தாத்பர்யார்த்தங்களை அறிவிக்கின்றன. அங்ஙனமே,

धर्मप्रवृत्तिरूपश्च तत्त्वसक्तः प्रदृश्यते ।

என்ற இதுமுதல்,

ततो विद्याः समस्ताश्च विज्ञेयास्तत्त्वलक्षणाः ॥
चतुर्विंशतिभिर्भक्ताश्चेति संसारिभिः सदा ।

என்கிற இதுபரியந்தமுள்ள இரண்டாவது பக்கத்தில் அச்சிடப்பட்டவைகளான கோபில நாரதர் இவ்விருவருடைய வசனங்களும் பொதுவாய் வித்தைகளனைத்திற்கும் ஸாங்கியர்களால் கூறப்பட்ட 24 தத்துவார்த்தங்களைப் போதிக்கும் தன்மையும் அக்கணக்கை யடைந்திருக்கும் தன்மையும் உண்டென உபோத்காதத்தில் வெளியிடுகின்றது. அவ்விதமிருந்தும் கோபிலர் முதலானவர்களுடைய வசனங்களை நீர் அங்கீகரிக்கமாட்டீர்.

ட.—ஓய் குமுதாகரரே, நாரதர் முதலியவர்களுடைய வசனங்களை பிரமாணமாக அங்கீகரிக்காவிடில் அது குற்றமேயாகும். ஆஸ்திகர்களால் அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமன்றோ பிரமாணமாக எடுத்துக்கொள்ள முடியுமென்று முன்னமேயே என்னால் கூறப்பட்டிருக்கின்றது. ஆகையால் சிறிதும் பிரசித்திபெற்றதாயும் தற்காலத்திலுள்ள சாஸ்திர பயிற்சியற்ற ஒருவராலியற்றப்பட்டதாயும் அதிகதோஷங்களால் நிரம்பியதாயும் முயற் கொம்பு மலடி மகன் முதலிய பதங்களைப்போல் அப்பிரசித்தமான அர்த்தங்களை வெளியிடுகின்றனவாயும், எழுத்துக்களை மாத்திரம் பொருளாகவுடையனவுமான சில வசனங்களை அங்கீகரித்து அநாதி காலம் தொடங்கி ஆஸ்தி

கர்களான ஆரியர்களால் ஆதரிக்கப்பட்டுவரும் ஸ்ரீமத் பகவத்கீதையைத் தப்பென்று கூறுவதற்கு எங்ஙனம் துணிவோம். தற்காலம் ஏற்பட்டதும் பித்தன் வாக்குப்போன்றதும் பொருளில்லாததுமான இக் கீதா சாஸ்திரத்தை எவ்வாறு அங்கீகரிக்க முடியும். பின்னும் வித்தைகள் 24 என்பதற்குப் பிரமாணம் எங்குக் கூறப்பட்டிருக்கின்றது. பாண்டவர்கள் சரித்திரத்தைமாத்திரம் கூறும் பாரதத்திற்கும் ஸ்ரீமத் ராமாயணத்திற்கும் 24000 சுலோகங்களென்று நன்கு பிரஸித்தியென்பது யாவருமறிந்த விஷயமே. அவ்விதமிருப்பினும் இதனுல் எல்லா வித்தைகளும் 24 கண்க்குள்ளதென்றும் இராமாயணம் பாரதம் முதலியவைகள் 24 தத்துவங்களை பிரகாசிக்கிறதென்றும் அதிக சிரமத்தை வகித்து சாதிப்பதற்கு ஸஜ்ஜனங்களான மகான்கள் முயற்சி எடுத்துக்கொள்ள மாட்டார்களல்லவா? மேற்றும் பாத்மம் முதலிய புராணங்களில் கீதை 18 அத்தியாயமென்பதைக் கணக்கிட்டு இருப்பதை யுக்திக்கும் இதர பிரமாணங்களுக்கும் உசிதமாக யிருப்பதாக எண்ணுகிறேம். வித்தைகளுக்கு 18 என்கிற சங்கியைகளே யெங்கும் பிரசித்தமாயிருக்கின்றன.

கு—வித்தைகளுக்கு 18 என்கிற பிரசித்தி எப்படி?

பா—நீரே கவனித்துப் பாரும். வித்தைகள் தாம் பதினெட்டு சங்கியை யுடையவைகள். அவையாவன— மறைகள் 4 அவைகளின் அங்கங்கள் 6 ஆயுர்வேதம் முதலிய உபவேதங்கள் 4 புராணம் மீமாம்ஸை தர்மசாஸ்திரம் நியாயம் என்பன 4 ஆக 18. பின்னும் புராணங்களும் 18-களே. உபபுராணங்களும் 18 த்தான். மகாபாரதத்திலும் 18 பர்வாக்களே.

அதின் ஸாரபூதமான கீதையும் 18 அத்தியாயமென்பதுதான் யுக்திக்குச் சரியாயிருக்கின்றது. பிரமாணங்களும் ஒப்புகின்றன. இவ்விதமிருக்க எக்காரணத்தைக்கொண்டு பிறரை வஞ்சிக்கும் உம் வார்த்தைகளைப் பிரமாணமாகக் கொள்வேன். ஆகையால் கோபிலர் முதலியவர்களின் வசனங்கள் இவ்விஷயத்தில் பிரமாணமாகமாட்டா. வேறு இருக்குமாகில் கூறும்.

து—மூன்றாவது பக்கத்தில் அச்சிடப்பட்ட வேறான உப கீதையின் வசனத்தையும் இதற்குப் பிரமாணமாக நூலாசிரியர் கருதுகின்றார்.

பா—கஷ்டம். இவ்விதம் சிரமப்படுவதால் யாது பயன். உலகத்தை வஞ்சிக்க எண்ணங்கொண்டவர்களுக்கு எதுவும் பிரமாணமாக ஆகலாம். இது இம்மட்டோடு போதும். புத்தியில்லாதவர்கள்போல் வீணில் பிதற்றிக்கொண்டு காலத்தைப் போக்கடிக்காதேயும். சுலோககணக்கில் விரோதமான அபிப்பிராயமென்ன?

து—பிராசீனமான கீதையன்றோ 700 சுலோகங்களால் கணக்கிடப்பட்டிருக்கின்றது. இஃதப்படியல்ல. பின்னும் 45 சுலோகங்கள் அதிகப் செய்து 745 ஆக வறப்பட்டிருக்கின்றது. இதற்கு பாரத வசனம் பிரமாணமாகின்றது.

षट्शतानि सविंशानि श्लोकानां प्राह केशवः ।
अर्जुनः सप्तपञ्चाशत्सप्तषष्टिं तु संजयः ।
धृतराष्ट्रश्लोकमेकं गीता नामायमुच्यते ॥

இந்தப் பிரமாணத்தில் நீர் என்ன அபிப்பிராயப் படுகின்றீர்?

யா—இந்த வசனமானது எல்லா பாரதகோசங்களிலுமிருக்கின்றதா?

கு—சில விடத்தில் காணப்படுகின்றது.

பா—எனக்கு, அதிக சந்தோஷத்தை விருத்தி செய்கிறீர். ஆகையால் எந்தக் கோசங்களில் எப்படிக் கிடைத்தது, என்பதைக் கூறும்.

கு—என் வார்த்தையை நீர் ஞாபகத்துடன் கேட்கவேண்டும். பாரதத்திலிருக்கும் பீஷ்ம பர்வாவானது 116 அத்யாயங்களுடையதென்று பிரமாணங்களாலறியப்படுகின்றது. அப்பிரமாணம் யாதெனில்,—

अध्यायानां शतं प्रोक्तं तथा सप्तदश परे।
पञ्चश्लोकसहस्राणि संख्या याष्टौ शतानि च॥
श्लोकाश्चतुरशीतिरस्मिन्पर्वणि कीर्तिताः।
व्यासेन वेदविदुषा संख्याता भीष्मपर्वणि॥

என்ற இவ்வசனங்கள். தற்காலம் அச்சிடபட்ட சில புஸ்தகங்களில் பீஷ்மபர்வாவில் 122 அத்தியாயங்கள் காணப்படுகின்றன. இருபதாண்டிற்குமுன் சரபோஜி ராஜபுரத்தில் அச்சிடப்பட்ட பாரதகோசத்திலிருக்கும் பீஷ்ம பர்வாவில் 118 அத்தியாயங்களிருக்கின்றன. இதுவே பிரதாப சந்திர ராயரால் கல்கத்தாவில் நாகரலிபியில் அச்சிடப்பட்ட புஸ்தகத்தில் 124 அத்தியாயங்களுடன் கூடியதாயிருக்கின்றது. இங்ஙனமிருக்க எந்த கோசத்தில் 118 அத்தியாயங்களிருக்கின்றனவோ அதில் புதிய கீதைக்குப்காரமாயிருக்கும் இரண்டு அத்தியாயங்களில்லை. கல்கத்தா புஸ்தகத்திலோவென்றால் அத்தியாயங்களதிகமிருந்தும் பல சுருதி சுலோகங்களின் கணக்கைக் கூறும் அத்தியாயத்தை மாத்திரம் காணோம். அன்

றியும் பாரதத்திலிருக்கும் அதிக பாடத்திற்கும் உரை மொழிவதாக ஸநத்ஸுஜாதியமென்கிற கிரந்தத்தில் பிரதிக்ஞை செய்தவராயும் பாரதம் முழுமையும் கூறிய வருமான நீலகண்ட சூரி என்பவர் பல சுருதி சுலோக ஸங்கியை இவைகளைக் கூறும் ஐந்து சுலோகங்கள் மாத்திரம் இல்லையென்று சொல்லி வியாக்கியானத்தை உபேக்ஷித்துவிட்டார். எப்படி பாஷ்யகாரர் முதலியவர்களால் வியாக்கியானம் செய்யப்பட்ட தற்காலம் விளங்கும் புஸ்தகங்களிலிருக்கும் பாடங்களையும் சுலோகங்களையும் குணோபசம்காரமென்கிற நியாயப்படி ஒன்று சேர்த்து வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கின்றது.

பா—உம்மால் கூறப்பட்ட இவ் வசனங்கள் பிரமாண கிரந்தங்களில் இல்லையென்றே நன்கு தெரிகின்றது. இவ் விஷயத்தில் தெரிந்துகொள்ளவேண்டியதாவது பதிலுரைக்கவேண்டியதாவது யாது உளது? எல்லாப் பாஷ்யகாரர்களாலும் அங்கீகரிக்கப்பட்ட கணக்குக்கு நீர் கூறுவது விரோதமாயிருப்பதால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. பின்னும் யாதொரு பாரத வசனமானது பிரமாணமாக உம்மால் உபந்நியாசம் செய்யப்பட்டதோ, அவ்வசனத்தை நீரே நன்கு அங்கீகரிக்கவில்லை. ஆனாலும் இதுமாத்திரம் இவ் விஷயத்தில் கேட்போர்களுக்கு வியஸனத்தை உண்டு பண்ணுகின்றது. தன்னுள்ளத்திலுதித்தான அபிப்பிராயத்தையே உண்மையெனச் சாதிக்கும் பிடிவாதம் கொண்டவனுக்கும் பிரம்மஹத்தி செய்தவன் சாக்ஷி கூறுவதுபோல் உலகத்தை வஞ்சிப்பதற்காக ஏற்படுத்திய வாக்கியங்களுக்கு இல்லாத வசனங்கள் பிரமாணமாகின்றன என்கிற இல்லாத இவ் வசனங்கள்

!,

எந்த கோசத்திலிருப்பதாகச் சொல்லுகின்றீரோ அங்காகிலும் உமதபிப்பிராயப்படி சுலோகக் கணக்குச் சரியாயிருக்கின்றதா?

கு—இதென்ன கேள்வி கேட்கிறீர். சுத்த தாமமண்டலத்தைத் தவிர வேறோரிடத்திலும் சுத்தகீதையில்லை என்று நிச்சயமாய்க் கூறுகின்றேன்.

பா—நண்பரே, கோபித்துக்கொள்ளாதேயும். இது வேறு சங்கை. இந்தச் சுத்த கீதையிலும் பிரக்ஷிப்த வசனார்த்தங்களிருக்கின்றனவா?

கு—ஆம்.

பா—என்ன் ஆலோசிப்பவர்போல் தோன்றுகிறது. இவ் விஷயத்தை நீர் நன்கு கவனிக்கவில்லையோ?

கு—ஏன் கவனிக்கவில்லை, நன்கு கவனிக்கப்பட்டதுதான். இஃதில் அவ் வசனார்த்தங்கள் இருக்கவும் இருக்கின்றன, இல்லாமலுமிருக்கின்றன. இரண்டு விதமாயும் அறிகிறேன்.

பா—இதென்ன விரோதமாகக் கூறப்படுகின்றது, தெளிவாய் எடுத்துக்கூறும்.

கு—சொல்லுகிறேன் கேளும். பிரமாண வசனம் கீதை இவ்விரண்டுகளிலும் சுலோக கணக்குகள் 746 என்பது சரியே. கேசவர் முதலான புருஷர்களின் வேற்றுமையால் குறிப்பிட்ட ஸங்கியைகளில் பேதமிருக்கின்றன.

அவையாவன:—

வாக்கிய கீதையில்

ஸ்ரீ பகவானால் சொல்லப்பட்டவை	620
ஆர்ச்சுனனால் கூறப்பட்டவை	57
ஸஞ்ஜயரால் ஷை	67

திருதராஷ்டிரரால் ஷை	1
	745

உன்மத்த கீதையின் சங்கியை.

ஸ்ரீ பகவானல் சொல்லப்பட்டவை.	608
அர்ஜுனனல் கூறப்பட்டவை.	69
ஸஞ்ஜயரால் கூறப்பட்டவை.	41½
திருதராஷ்டிரரால் ஷை	1
துர்யோதனன்	3
பீஷ்மர்	2
துர்க்கா	1½
பிரம்மஸ்துதி	19
	745

இந்துமதாசாரக்கொள்கை.

(முன்தொடர்ச்சி)

ஆனல் அதே 9-வது அத்தியாயத்தில் 60, 61, 62-வது சுலோகங்களில் விதவைகளிடத்தில் பெரியோர்களனுமதியினல் புத்திரோத்பத்திக்காக புணர்ந்து புத்திரர்களை யடையலாமென்று சொல்லியிருந்தபோதிலும் அடுத்தாப்போல் " பிள்ளையில்லாமற் போனலும் விதவையைக் கண

வனன்றி மற்றொருவனிடத்துப் பிள்ளையைப் பெற்றுக் கொள்ளும்படியாகத்விஜர்கள் அனுமதி செய்யக்கூடாது. செய்தால் பழமையான பதிவிரதா தர்மத்தை யழிக்க ஹேதுவாகிறது என்றும் எந்த வேதத்தாருக்கும் புத்திரனில்லாமற் போனாலும் பரபுருஷனுடன் கூடி பிள்ளையைப் பெற்றுக்கொள்ளும்படி விவாக மந்திரத்தில் சொல்லவில்லை யென்றாலும் விவாக விதாயக சூத்திரத்தினும் விதவா விவாகம் செய்யும்படி விதி கிடையாதென்றும் ஒருவன் மனையாள் மற்றொருவனைப் புணர்வது சாஸ்திரத்திற் சொல்லியிருந்தாலும் அது பசு ஜாதியின் தர்மமே யல்லாது மனிதர்களுக்குக் கூடாதென்று பெரியோர்களால் ஒருகாலத்தில் நிந்திக்கப்பட்டிருந்ததென்றும் ஆனால் பிற்பாடு அதார்மிகனான வேணனென்னும் அரசன் உலகாளும்பொழுது அந்தப் பசுஜாதி தர்மத்தை மனிதர்களுக்கு ஏற்படுத்தினதாயும் அதுமுதல் இந்த தர்மம் உண்டாயிற்றென்றும் மேற்சொன்ன வேணனானவன் பூமிமுழுவதும் ஒரு குடையின் கீழ் ஆண்டாலும் அவன் அதார்மிகனென்றும் அவன் காமத்திற்கு சுவாதீனப்பட்டு இவ்வித விவாஹம் முதலியவற்றால் இக்காலத்தில் முறையிடப்படுகிற இவ்வளவு வர்ணபேதங்கள் ஏற்பட்டிருக்கின்றனவென்றும், இந்த அதர்மமான விவாகமானது நடுவில் காமத்திற்குட்பட்ட அதார்மிகனால் ஏற்பட்டிருந்தாலும் கூட துவாபர கலியுகங்களில் அடியோடு அறுத்து நிஷேதிக்கத் தக்கதென்றும் மனுவானவர் ஸ்பஷ்டமாய் சொல்லியிருக்கிறார். ஷை வேணன் காலத்தில் சாஸ்திரம் ஏற்பட்டாலும் கூட அந்தச் சாஸ்திரத்தைப் பிரமாணமாக வைத்துக்கொண்டு விதவைகளை மற்றொருவனிடத்துப் புணர உத்திரவு கொடுத்தால் நிந்திப்பதாயும் மனு சொல்லுகிறார். பிரகஸ்பதியும் மனுதர்ம சாஸ்திரத்தை வியாக்கியானம் செய்திருப்பதில் மனுவானவர் முன் அனுமதி கொடுத்துப் பிந்தி,

னுஷிப்பது துவாபர கலியுகங்களில் அவைகளை யனுஷ்டிக்காதவண்ணமே என்று வியாக்கியானம் செய்திருக்கிறார். பின்னும் அதே அத்தியாயத்தில் 71, 72-வது சுலோகங்களில் ஒரு பெண்ணை ஒருவனுக்குக் கொடுக்கிறதாக வாயினல் நிச்சயம் செய்த பின்பு, அவ்வரனிறந்தாலும் அவ்வரனுடைய அண்ணன் தம்பிகளுக்குக் கொடுக்கவேண்டியதே யல்லாது வேறொருவனுக்கும் கொடுக்கக்கூடாதென்றும் வேறொருவனுக்குக் கொடுத்தால் ஆயிரம்பேர் சுற்றத்தாரைக்கொன்ற தோஷம் சம்பவிக்குமென்றும், வைதவ்யம், தீராப்பிணி, வியபிசார தோஷமிருந்து அவைகளை மூடிவைத்து விதிப்படி பாணிக்கிரஹணம் செய்துகொடுத்தாலும் சப்தபதிக்கு முன் அதாவது அம்மி மிதிப்பதற்கு முன் ஷை தோஷங்கள் தெரிந்தால் உடனே நீக்கிவிடலாம் என்றும் அப்படி நீக்கி விடுவதினல் தோஷமில்லையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனல் ஒரு பெண் இளம் பிராயத்தில் அதாவது சுகமனுபவிக்கக் கூடிய வயதிற்கு முந்தி வைதவ்யமடைந்தால், அப்படி பர்த்தா சுகமடையாத பெண்ணை அப்படியே வைதவ்யத்தோடேயே விடுவது தோஷமல்லவா என்று எதிர் கக்ஷிக்காரர்கள் கேட்கிறார்கள். நம்முடைய சுருதி வாக்கியங்களில் முறையிடுகிற கர்மயோகத்திலும் ஜன்மாந்திரத்திலும் ஆஸ்திக்ய புத்தியுள்ள விவேகிகள் அதைத் தோஷமென்று நினையார்கள். ஏனெனில் ஒரு மனிதன் கொலை அல்லது களவு செய்து அதற்காக தண்டனை யடையும் பக்ஷத்தில் அது பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தோஷமாகுமா? அவர்களா அம்மனிதனைக் கொலை களவு செய்யச் சொன்னார்கள்? அவர்களா அம்மனிதனை அக்குற்றத்திற்குத் தண்டிக்கச் சொன்னார்கள்? அதுபோலும், அந்த நிர்ப்பாக்கியமான பெண்ணை

நாமா அற்பாயுசுக்கு விவாகம் செய்து கொடுத்து அந்தற்ப்ராயுசுவை இறக்கச் சொன்னோம்.

अवश्यमनुभोक्तव्यं कृतं कर्म शुभाशुभम् ।

என்றபடி பூர்வ ஜன்மத்தில் செய்த வினைக்குத் தக்கபடி இந்த ஜன்மத்தில் இப் பயனை யனுபவிக்கிறாளே யல்லாது வேறல்ல. மேலும் ஸ்திரீ புருஷர்களுக்கு விவாகமானது தர்ம காரியங்களுக்காக ஏற்பட்டதேயன்றி கேவலம் காம்யார்த்தமாய் ஏற்பட்டதல்ல.

பிரம்மசர்ய, கார்ஹஸ்திய, வானப்பிரஸ்த சன்னியாச ஆசிரமங்களில், கிருஹஸ்தாசிரமமானது மற்றைய ஆசிரமத்தார்களுக்காக ஏற்பட்ட அன்ன சத்திரமே யல்லாது வேறன்று. தவிரவும் தேவருஷி பிதருக்களுக்கும் உபசாரம் செய்யும் மடம். இம்மடத்திற்கு அதிபதியாகிய கிருஹஸ்தர்களுக்குப் பின் மடத்தின் தர்மாதிகளை நடத்துவதற்குச் சத்துவ குணம் தர்மசிந்தை முதலிய குணங்களால் பொருந்திய திறமையுள்ள ஒரு பிரஜை அவசியம். அந்தப் பிரஜை தன்னால் வேதமந்திரபூர்வமாய்ப் பாணிக்கிரஹணம் செய்துகொள்ள, ஸ்ரீயக்கென்று சொல்லப்பட்டவும் தனக்குச் சமகுலத்திற் பிறந்தவுமான கன்னியா ஸ்திரீயை விவாகம் செய்துகொண்டு அவளிடத்திலேயே தனக்குப் பிறந்த பிரஜையே சிரேஷ்டமாகச் சொல்லியிருக்கிறதே தவிர பிறருடைய மனைவியிடத்தில் பிறந்த பிள்ளையைச் சொல்லவேயில்லை. எப்படி ஒருவனுடைய பசுவை மற்றொருவன் தன்னுடைய ரிஷபத்தை விட்டுக் கன்றை உற்பத்தி செய்தாலும், எப்படி ஒருவனுடைய நிலத்தில் மற்றொருவன் விதைவிதைத்தாலும், அந்த ரிஷபத்தினால் உண்டான கன்று பசுவையுடையவனுக்குத்தான் சேருமோ, விதைத்த விதையின் பலன் விதை தெளிக்கப்பட்ட நிலத்திற்குடையவனைத்தான் சேருமோ, அவ்வண்

ணமே பரஸ்திரீயினிடத்தில் உண்டுபண்ணின பிள்ளை அந்த ஸ்திரீயை யுடையவனைச் சாருமே யொழிய இவ னைச் சாராது. ஆதலால் முன் யாரும் கல்யாணம் பண் ணிக் கொண்டிராதவும் தானே பண்ணிக் கொண்டவுமான பெண்ணினிடத்தே புத்திரன் உற்பத்திபண்ணினால் சாஸ் திரப்படி தானே இந்திரிய ரூபமாய் கர்ப்பத்தை யடைந்து தானே பிள்ளையாவதால் தன் ஆசிரம தர்மங்களைத் தன் பிள்ளை தன் ஸ்வரூபத்தோடும் தன் குணத்தோடும் கூடிய வனாய்த் தன் அபிப்பிராயப்படி சரிவர நடத்துவானென்று மனுதர்மசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய ஏற்கனவே கல்யாணம் பண்ணிக்கொண்டு விதவையாய்ப் போனவளை விவாகம் செய்து கிருஹஸ்தா சிரம தர்மத் தை நடத்தும்படியான பிள்ளையை யடையும்படி (ஏற்க னவே சொல்லப்பட்டிருக்கிறபடி விவாக விதாயக) சூத்தி ரத்திற் சொல்லவில்லை, ஏனெனில் இந்தப் பிள்ளை மேலே சொல்லிய திருஷ்டாந்தங்களின்படி முந்திய புருஷனுக்கே சொந்தமே யல்லாது இவனுடைய பீஜமாயிருந்தாலும் க்ஷேத்திரத்திற்கு முன் பாத்தியதை இவனுக்கில்லாததால் அந்த க்ஷேத்திர பலன் இவனைச் சேராது. தவிரவும் ஒரு புருஷன் இறக்குங்கால் அவனுடைய ஸ்தூல தேகமே அழி கிறதே யல்லாது சூக்ஷ்ம தேகமும் காரணதேஹமும் பிரம் மசாக்ஷாத்காரமடைகிற வரையில் பிரியவில்லை. ஸ்தூல தேகத்துடன் பிரத்தியக்ஷமாயிராவிடினும் மறை பொரு ளாயிருக்கிற ஜீவனை அலட்சியம் செய்து இன்னொருவனு டன் கூடியிருத்தலானது புருஷன் தேசாந்திரம் போயி ருந்தபொழுது அவனை மனத்தில் கொஞ்சமேனும் நினை யாமல் வேறொருவனோடு சேர்ந்து புழமையான பாதிவிரத் தியத்தை அழிக்கிற வண்ணம் பாதிவிரத்தியத்தை அழிப் பவளாகிறாள். சூக்ஷ்ம ரூபத்தோடு பிதுர் தேவதை ஸ்வரூ

பத்தை யடைந்த ஒரு காலத்தில் பிராண நாயகனென்றும் உயிர்த் துணைவனென்றும் சொல்லப்பட்ட அந்த ஜீவன் தன் பத்தினியால் தன் குலம் நாசமடைந்து தன் வம்சத்தில் எள்ளும் ஜலமும் விடுவதற்கு யோக்கியமில்லாமற் போனதைப்பற்றி மிகவும் துக்கிக்கும்.

முன் காலங்களில் பதிவிரதா சிரோமணிகள் உடல்கள் வேறாகயிருப்பினும் பிராணன் ஒன்றாகப் பாவித்து பிராணநாதன் சுகதுக்கங்கள், லாபநஷ்டங்கள் தங்களுடையதென்று நினைத்துப் பிராணநாதனுடைய சுக துக்கங்கள், கஷ்டநிஷ்டூரங்கள் தனக்கு ஏகதேசத்திலுண்டாகும்படியான இடுக்கண்களையும் இன்னும் எவ்வித அசௌகரியங்களையும் பாராமல் பிராணநாதன் உயிருடன் கூடியிருக்கும்பொழுது அனுசரித்து வந்ததோடுகூட, அப்பிராணநாதன் உயிர் மாய்ந்தபிறகும் நாதனுடைய பிராணன் போனது தன் பிராணன் போனதாகவே பாவித்தும் பர்த்தாவாகிய பெரும் பாக்கியம் போனபொழுது மற்றப் பாக்கியம் நிர்ப்பாக்கியம் என்று, பதிசுகத்தை தவிர்த்து மற்ற சுகங்கள் சுகங்களல்லவென்று எல்லா சுகங்களையும் வெறுத்து ஒழித்து பதியின் உடலுக்குத் துணையாகத் தன் தேகத்தைச் சககமனம் அதாவது உடன்கட்டை ஏறுதலினால் அக்கினி பகவானுக்கு அர்ப்பணம் பண்ணினபொழுது, இந்தக் காலத்தில் அப்பதியினிடத்திலுள்ள பக்திக்கும் அபிமானத்திற்கும் அடையாளமாய்ப் பிராணதாரத்திற்கு அத்தியாவசியமானவைகளைத் தவிர மற்றைச் சுகங்களை வெறுத்து வேறு புருஷனை நினையாமல் சாகுமளவும் அந்த இறந்த பதியையே ஏகாக்கிர சித்தத்துடன் தியானித்து அந்தப் பதியடைந்த லோகத்தையடைய முயலக்கூடாதா? ஆகையால் இவ்வாறு விதவா விவாகம் செய்துகொள்ளாமல் பதிவிரதா தர்மத்தினால் நற்கதி கிடைப்பது திண்ண

மென்று நினைத்து அவ்வாறே செய்து இந்துக்களாகிய நாம்நற்கதி விதவைகளுக்கு அடைவிக்கமுயலவேண்டியது. உலகமெங்கும் ஆண்டு கீர்த்திபெற்று காலம் சென்ற நமது தேசத்து சக்கரவர்த்தினியாகிய மாட்சிமைத் தங்கிய விக்டோரியா மஹாராணியர்கள் தன் ரூபத்தாலும் அளவில்லாத ஐசுவரியத்தாலும் கிரிஸ்தவ மதத்தில் புனர், விவாகத்திற்கு தாராளமாய் இடம் கொடுப்பதாலும், தன்னிச்சாமாத்திரம் புனர்விவாகம் செய்துகொள்ளக்கூடியதாயினும் அப்படிச் செய்துகொள்ளாமல் வெகு பால்லியத்தில் பதியிழந்த ராணியாரவர்கள் அதுமுதல் சாகுமளவும் பாதிவிரத்தியத்தை யனுஷ்டித்தும் பாதிவிரத்தியத்தைக் காத்துக்கொண்டுவந்தது சுருதிஸ்மிருதிகளில், யுக்திவாதங்களால் தடுக்கப்பட்டவுமான கீழ்நாட்டாராகிய "மேலோர்" என்று சொல்லும்படியான நம்மார்யர்களுக்கு இவ்வாறு புனர் விவாகம் செய்யாமல் பாதிவிரத்தியத்தைக் காப்பாற்றுவதற்கு பிரத்தியக்ஷமான திருஷ்டாந்தம்.

பால்லிய விவாகம்:—

ஸ்ரீ பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய மூன்று வர்ணத்தார்களின் ஆண் பிள்ளைகளுக்கு தர்மசாஸ்திரத்திலும் வேதத்தில் விதித்தபடி கர்ப்பமானது முதல் முறையே எட்டாவது, பதினோராவது, பன்னிரண்டாவது வயதுகளில் உபநயனமாய் முப்பத்தாறு அல்லது பதினெட்டு, அல்லது ஒன்பது வருஷம் வரையில் வேதங்களோதிய பிறகு விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறபடியாலே பிராமணன் பிறந்தது முதல் 44-வது 26-வது அல்லது 17-வது வயதில் விவாகம் செய்துகொள்ள வேண்டியதாய் ஏற்படுகிறதே தவிர அதற்கு முந்தி செய்து கொள்ளும்படியாய் ஏற்படவில்லை. ஆயினும் தேசகால வர்த்தமானங்கள் அனுசரிக்கும்பொழுது முன் காலத்தைவிட

இந்தக் காலங்களில் தேகதாருட்டியம், ஆண்மைத் தனம், வ்யது முதலியவைகள் அதிலும் குளிர் தேசங்களாகிய ஐரோப்பிய மேல் நாடுகளைவிட நம்முடைய தேசத்தில் இன்னும் விசேஷ கேவலமாயிருப்பதால் சுருதி ஸ்மிருதியை யனுசரித்து 17 முதல் 26 வரையில் விவாககாலம் நிர்ணயிக்கக்கூடியதே யொழிய அதற்கு முந்தி நிர்ணயிப்பது அனேக காரணங்களால் உசிதமல்லவே. அந்த காரணங்கள் யாவர்க்கும் தெரிந்ததாயும் யாவராலும் ஒப்புக்கொள்ளக் கூடியதாயிருப்பதினால் அதைப்பற்றி இங்கு விஸ்தரிக்க வேண்டியதில்லை. ஸ்திரீகள் விஷயமோ அப்படியன்று. மனுதர்ம சாஸ்திரத்திற் சொல்லியபடி ஸ்திரீகள் பெரும்பாலும் கற்புநிலமை யின்மையும் நிலையில்லா மனமும் நண்பில்லாமையும் இயற்கையாயுள்ளவர்கள். இந்த குணங்கள் பெண்டுகளுக்குச் சுபாவிகம். பிரம்மா அவர்களைச் சிருஷ்டித்தபோதே உண்டானதென்றும் ஆதலால் புருஷர்கள் அவர்கள் கேடுறாமல் நடப்பதற்காக அதிக ஜாக்கிரதையானவும் மேலானவுமான முயற்சி செய்ய வேண்டியது என்றும் மனுப்பிரஜாபதி சொல்லுகிறார். இந்த முக்கிய காரணத்தைக் கொண்டே ஸ்திரீகளுக்கு ஒருகாலத்தும் சுவாதீன மில்லாமல் பால்யத்தில் தகப்பனும், யௌவனத்தில் ஏற்ற பர்த்தாவும் முதுமையில் பெற்ற பிள்ளையும் முறையே தங்கள் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு பாதுகாத்துக் கொண்டு வரவேண்டியதென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், காமம் முதலிய துர்க்குணங்களுக்கு ஆதாரமானவும் தங்களுடைய இஹபரலோக சுகதுக்காதிகளுக்கு இருப்பிடமான யௌவனமான இரண்டாவது தசையானது தன்னைப் பெற்று வளர்த்த தாய் தந்தையரால் அல்லாமல் பர்த்தாவாகிற யாதொரு சம்பந்தமுமிராத அன்னிய புருஷனால் ஆளப்பட வேண்டியதாயிருப்பதினால் ஷெ

யௌவனதசை அடையப்படுவதற்கு முந்தியே ஐஹிக சுகங்களினால் அல்புடன் திருப்தி செய்கிற கெடுதல் மார்க்கத்தில் மனம் செல்லவிடாமல் நல்ல மார்க்கத்திற் சேர்த்து நற்கதி யடைப்பிக்கிற ஒரு விவேகியாயும் சமர்த்தனுமான புருஷனைத் தெரிந்தெடுக்க வேண்டியதவசியமாயிருக்கிறது. யௌவனதசை யடைந்தபிறகு தேட ஆரம்பிக்கும் பக்ஷத்தில் யௌவனத்தினால் பரபுருஷர்களிடத்தில் மனஞ்சென்று தன்னுடைய இஹபரலோக சாதகங்களும் கெட்டுப்போவதுடன் தான் பிறந்த, புகுகிற குலமிரண்டும் முன் அநேக தலைமுறைகள் அழிந்துபோய்விடும். அப்படி ஒரு புருஷனை சம்பாதிப்பது பெண்ணின் பால்விய தசைக்குச் சுவாதீன புருஷனின் தந்தையினுடைய கடமையே. மனுதர்ம சாஸ்திரத்தில் 9-வது அத்தியாயத்தில் 4-வது சுலோகத்திலும் "பெண்ணை ருது காலத்திற்கு முன் தக்க வரனுக்குக் கல்யாணம் செய்துகொடாத தகப்பன் நிந்திக்கப்படுவதாக" சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ருதுவாய் மூன்று வருஷம் வரையிலும் தகப்பன் வரனைத் தேடாமற்போனால் பின்பு தான்தானே வரனை வரிக்கும்படிக்கும், சொல்லியிருப்பதோடு ருதுவான பெண்ணை விவாகம் செய்பவன்; அவள் தகப்பனுக்கு சுல்கம் கொடுக்கவேண்டியதில்லை யென்றும், ஏனெனில் அந்தப் பெண்ணை ருதுகாலத்தில் புருஷனுடன் சேர்ப்பிக்காததினால் தந்தை ஸ்வாதினம் எடுபட்டுப் போய்விட்டதல்லவாவென்று கேள்வி கேட்பதினாலும் ருதுகாலத்திற்கு முந்தியே வரனைத் தேடி ருதுகாலத்தில் புணருவதற்குத் தயாராய் விவாகம் செய்து வைத்திருக்க வேண்டியது என்று ஏற்படுகிறது. ஸ்திரீகளுக்கு முக்கிய லக்ஷணமான கற்பு கெடாமலிருப்பதற்காகவே ருதுவான பதினாறு நாளுக்குள் நாள் பார்க்காமலே ருதுசாந்தி கர்ப்பாதான முகூர்த்தம் செய்யவேண்டுமென்றும் சாஸ்திரம் ஏற்

பட்டிருக்கிறது. கலியுகத்திற்குப் பிரமாணமான பராசர ஸ்மிருதியில் ஏழாவது அத்தியாயத்தில் "எட்டு வயதுப் பெண்ணிற்கு "ரோஹிணி" என்றும் பத்துவயதுப் பெண்ணிற்கு "கன்னியா" என்றும் அதற்குப் பிற்பாடு மாதவிடாய் ஆகிய ஸ்திரீக்குச் சமமானவளென்றும், பெண்ணிற்குப் பன்னிரண்டு வயது ஆயும் யாதொரு போஷகனானவன் தன் போஷணையிலுள்ள அப்பேர்ப்பட்ட பெண்ணை விவாகம் செய்து கொடுக்கவில்லையோ அப்பேர்ப்பட்ட போஷகனுடைய முன்னோர்கள் இடைவிடாமல் ஒவ்வொரு மாதவிடாயில் உண்டாகிற சோணிதத்தைக் குடிப்பதாகவும், அப்பேர்ப்பட்ட போஷகர்களான தாய் தந்தையர்கள், அவ்வாறே மூத்த சகோதரன் முதலான ருதுகாலத்திற்கு முன் விவாகம்செய்ய உபேக்ஷித்திருந்த பந்துவர்க்கங்கள் நரகப் பிராப்திக்குள்ளாவார்களென்றும் அஞ்ஞானத்தினாலாவது கர்வத்தினாலாவது மேற் சொல்லியபடி ருதுவானபெண்ணை விவாகம் செய்துகொள்ளும் யாதாமொரு பிராமணன் சம்பாஷிக்கப்படாதவனாயும் பங்திதூஷகனாயுமாகிறதோடு ஒரு சூத்திர ஸ்திரீயின் புருஷனுக்குச் சமானமானவனென்றும் வெகு கண்டிப்பாயும் கடுமையாயும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மறு சக்ஷிக்காரர்கள், ஸ்திரீகள் ருதுகாலத்திற்கு முந்தி இளம்பிராயத்திலேயே கலியாணம் பண்ணப்படாமல் ருதுகாலம் கழிந்து வெகு காலத்திற்குப் பிற்பாடு கலியாணம் செய்துகொள்ள எத்தனித்தால் தானாய்ச் சுயபுத்தியுடன் வரத்தைத் தேடிக்கொள்ளவும், அப்படிச் சுயேச்சையாய்த் தேடிக்கொள்ளுவதினால் தம்பதிக்குள் அன்னியோன்னிய பாவத்திற்கு யாதொரு இடையூறில்லாமல் சுகமாய் ஜீவிப்பார்களென்றும், ருதுகாலத்திற்கு முந்தி விவாகம் செய்துகொண்டு புருஷனிறந்துபோனால் புனர் விவாகத்திற்கு இடங்கொடாததினால் சிற்றின்ப சுகமனுபவிப்பதற்குக் கொஞ்சமேனும் ஏதுவில்

லாமற் போய்விடுகிறதோடு விபசார தோஷத்திற்கும் மிக்க காரணமேற்படுகிறதென்றும், ருதுகாலத்திற்குப் பிந்திச் செய்துகொண்டால் கொஞ்சமாவது சிற்றின்ப சுகம்னுபவிப்பதற்கு இடமிருக்குமென்றும், ஆதலால் விபசார தோஷத்திற்கு இடமிராதென்றும் ககூறியாடுகிறார்கள்.

ஸுப்பிரமணிய ஐயர்.

(இன்னும் வரும்.)

மாயாசாஸ்திரம்.

(முன்தொடர்ச்சி.)

1. யாகம் என்பது யஜ தாதுவிலிருந்து உண்டானது. யஜனं உபாஸனை செய்வது பொருள். அதிகாரிகளின் அந்தக்கரண சுத்தியை உத்தேசித்து செய்யப்படும் கர்மா. ஜீவர்கள் முன் ஜன்மங்களில் செய்திருக்கும் கர்மாக்களை அனுசரித்து அவர்கள் அந்தக்கரணம் சுத்தமாகவும் அசுத்தமாகவும் இருக்கிறது. ஸம்ஸாரத்தில் அடையக்கூடிய விஷய சுகங்கள் சாசுவதமல்ல. அதை அனுபவிக்க வேண்டியதில்லை என்று நினைத்து அந்த சுகத்தை கொடுக்கக்கூடிய கர்மாக்களை செய்ய இஷ்டப்படாமல் ஞானத்தில் மாத்திரம் இச்சையுள்ளவர்கள் சிலர். யாகம் முதலிய வேதத்தில் விதிக்கப்பட்டிருக்கும் கர்மாக்கள் பலனை கொடுக்கக்கூடுமென்று அறிந்தும் பலனை இச்சிக்காமல் மனதை சுத்தப்படுத்தி ஏகாக்ரதா அவஸ்தைக்குக் கொண்டுவரவேண்டுமென்றும் ஞானத்திற்கு சாதனம் கர்மாவென்றும் நினைத்து கர்மாவை செய்பவர்கள் சிலர். கர்மாக்களின் பலனை அடையவேண்டுமென்கிற இச்சை

யுடன் கர்மாக்களை செய்பவர்கள் சிலர். இவ்விதமாக உலகத்தில் ஜீவர்கள் பலவிதமாயிருக்கிறார்கள். அவர்கள் சித்தத்தை சுத்தப்படுத்த மார்க்கங்கள் இருவகை. பிரவிருத்தி, நிவிருத்தி. பிரவிருத்தி மார்க்கத்தை அனுசரித்து செய்பவன் கர்மபலனை அனுபவித்து, திரும்பவும் ஜன்மாவை அடைகிறான். நிவிருத்தி மார்க்கத்தை அனுசரித்து கர்மாவைச் செய்பவன் திரும்பவும் ஜன்மாவை அடையமாட்டான். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற 3 குணங்களின் ஹ்ராஸவிருத்தியால் பிரவிருத்தி நிவிருத்தி மார்க்கங்களில் பிரவிருத்தி ஏற்படும். கர்மாக்களைச் செய்யும்படி தூண்டுவது வாஸனையுடன்கூடிய மனதுதான். மனதை க்ஷயிக்கச்செய்து மோக்ஷத்தை அடைய இச்சிப்பவர்கள் கர்மாவில் பிரவிருத்தி மார்க்கத்தை அனுசரிக்கமாட்டார்கள். அவர்கள் கர்மாவைச் செய்யவேண்டியதில்லை. அதிகாரிகளின் மனோபலத்தை உத்தேசித்து அவரவர்களுக்குத் தகுந்தபடி மார்க்கங்கள் கல்பிக்கப்பட்டிருக்கின்றன. ஈசுவரனுடைய அநேக ரூபங்களும் குணங்களும் அதிகாரியின் மனதை அனுசரித்து அறியக்கூடியது. ஈசுவரனை அடையும் மார்க்கங்கள் பலவகையாயினும் முடிவில் ஓரேயிடத்தில் சேர்த்துவிடும். மேகங்கள் வர்ஷித்து பர்வதங்களிலிருந்து பிரவாகமாக பெருகும் நதிகள் அநேகமானலும் முடிவில் சமுத்திரத்தை அடைவதுபோல், அநேக மார்க்கங்களை அதிகாரிகள் அனுசரித்தாலும் முடிவில் ஈசுவரனையே அடைகிறார்கள். அஷ்டாங்க யோக பலத்தினால் மனதை அடக்க சக்தியுள்ள யோகிகள் அந்தர்யாமியான மஹாபுருஷனை உத்தேசித்தும், வேதத்தில் விதிக்கப்பட்ட யக்ஞங்களில் பிரவிருத்தியுள்ள விப்ரர்கள் அநேக தேவதைகளின் ரூபமாக விளங்கும் ஈசுவரனை உத்தேசித்தும், சாதன சதுஷ்டய ஸம்பன்னர்களும் கர்மாக்

களில் வெறுப்புடையவர்களுமான ஞானிகள் ஞானரூபி யாக பிரகாசிக்கும் பிர்ம்மத்தை உத்தேசித்தும், சகுணரூபங் களை உபாஸனை செய்யும் பக்தர்கள் ஈசுவர ரூபங்களில் அவரவர்களுக்கு அபிமதமான ரூபங்களை உத்தேசித்தும், தந்திர சாஸ்திரங்களில் பிரவிருத்தியுள்ளவர்கள் தங்கள் ஆசாரியர்கள் உபதேசம் செய்தபடி ஸ்வரூபங்களை உத்தே சித்தும், பஜனம் செய்கிறார்கள் இவர்கள் அனைவரும் கால கிரமமாக ஈசுவரனை அடைவார்கள் என்பதில் ஸம்சய மில்லை என்று பாகவதம் 10-ம் ஸ்கந்தத்தில் சொல்லப்பட் டிருக்கிறது.

2. இதைப் பார்க்குமளவில் ஞான மார்க்கத்தில் பிர விருத்தியுள்ளவர்களும் யோகமார்க்கத்தில் பிரவிருத்தி யுள்ளவர்களும் பலனை உத்தேசித்து கர்மாவில் பிரவிருத் திக்கமாட்டார்கள் என்று தெரியவருகிறது. மந்திர, திர விய சாதனங்களுடன் கூடிய கர்மாக்களை செய்ய ஞானியும் யோகியும் இச்சிக்கமாட்டார்கள். தபோ பலத்தினால் அந்தக்கரணத்தை சுத்தப்படுத்தி துருவர், பிராசீன பாஹிஸ் முதலிய ருஷிகள் ஞானம் அடைந்ததாக நாம் கேள்விப்படுகிறோம்.

द्रव्यमन्त्रात्मको यज्ञः तपश्च समतात्मकम् ।
यज्ञैश्च देवानाप्नोति वैराग्यं तपसा पुनः ।
तस्माद्विशिष्यते यज्ञात्तपः सर्वैस्तु कारणैः ॥ मत्स्यपुराणम् ।

ஞானத்தால் அடையக் கூடிய பதவியை யக்ஞம் முதலிய கர்மாக்களால் அடையமுடியாது. ஆகையால் யாகத் தைக் காட்டிலும் தபசுதான் சிரேஷ்டமென்று நினைத்து அநேக ரிஷிகள் கர்மார்க்களில் பிரவிர்த்திக்கிறதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் ஞானத்தை அடைய இச்சிப்பவர்கள் கர்மா செய்யவேண்டியதில்லை என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். சித்தத்தை சுத்திசெய்து திரு

டப்படுத்த கர்மானுஷ்டானம் ஏற்பட்டிருக்கிறது. அதிகாரிகளின் மனது பலவிதமாகவிருப்பதால் அவரவர்களின் மனதிற்கு ஒத்த மார்க்கத்தை கல்பித்து அதில் பிரவிருத்தியை உண்டாக்கி அதிலிருந்து சித்த சுத்தி உண்டாக்க வேண்டியது முக்கியமான கடமை அல்லவா? பசு முதலிய மிருகங்களை வசப்படுத்த வேண்டுமானால் அவைகளுக்கு திருப்திகொடுக்கக்கூடிய திருணம். முதலியவைகளைக் கொடுத்து வசப்படுத்துவதை நாம் பார்த்திருக்கிறோம். குழந்தைகளின் தேஹத்தை காப்பாற்ற கடமைபட்டிருக்கும் தாய்மார் குழந்தைகளுக்கு ருசி கொடுக்கக் கூடிய தித்திப்பு சாமான்களைக் கொடுத்து கசப்பு ஔஷதங்களை செலுத்தி தேக ஆரோக்கியத்தை உண்டாக்குகிறதில்லையா! அவ்விதமாக சஞ்சலமான மனதுடையவர்களுக்குக் கூட ஞானம் உண்டாக்க வேண்டியதற்கு மனதை சுத்தப்படுத்தி சாஞ்சல்யத்தை நிவர்த்திசெய்யும் கர்மானுஷ்டானத்தை உபதேசம் செய்து அதின் மூலமாக தெய்வங்களினிடம் பிரீதி உண்டாகும்படி செய்து ஏகாக்ரதா அவஸ்தையை ஏற்படுத்தி ஞானத்தை உபதேசம் செய்வதற்கு வேதம், கர்மகாண்டம், உபாஸனாகாண்டம், ஞானகாண்டம் என்று பிரிக்கப்பட்டிருக்கிறது. ஞானத்திற்கு முக்கியமான சாதனங்களான கர்மாவை விதிக்கும் கர்மகாண்டத்தில் பிரவிருத்தியை உண்டாக்கி அதின் மூலமாக உபாஸனையாலும் பிரவிருத்தியை உண்டாக்கி முடிவில் ஞானமார்க்கத்தில் சேர்த்து வருகிறது. ஆகையால் கர்மகாண்டத்திற்கும் ஞானகாண்டத்திற்கும் யாதொரு விரோதமுமில்லை. கர்மகாண்டத்தில் உபதேசம் செய்யப்படும் கர்மங்கள் விதி ரூபமாகவும் நிஷேத ரூபமாகவும் இருக்கிறது. நிஷேதிக்கப்பட்ட கர்மாக்களைச் சொல்லி விதிக்கப்பட்டிருக்கும் கர்மாக்களையும் காண்பிக்கிறது.

அஹிம்ஸை முதலியவைகள் நிஷேதிக்கப்பட்டவைகள். விதிக்கப்பட்ட கர்மாக்களில் முக்கியமான கர்மாபாகம்.

पशूनां द्रव्यहविषामृक्सामयजुषां तथा ।
ऋत्विजां दक्षिणायाश्च संयोगो यज्ञ उच्यते ॥ मत्स्यपुराणम् । १४५.४४.

யக்ஞம் என்கிற கர்மா, பசு, ஸோமலதா ஹவ்யாதிகள் ருக், யஜுர், ஸாம என்கிற 3 வேதங்களில் சொல்லிய மந்திரங்கள் வித்வான்கள், ருத்விக்குகள் சரியான தக்ஷிணை முதலியவைகளின் சேர்க்கை என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேதங்களில் சொல்லப்பட்டிருக்கும் மந்திரங்களை சரியானபடி விசாரிக்கக்கூடிய ருத்விக்குகளின் ஒத்தாசையின்பேரில் அவர்களின் சிரமத்திற்குத் தகுந்தபடி தக்ஷிணை கொடுப்பது. தேவதா பிரீதிகரமான ஹவ்யங்களை ஹோமம் செய்வது யாகம். அவ்விதம் யாகத்தை நடத்தவேண்டிய யஜமானனுடைய லக்ஷணங்களும் சொல்லப்பட்டிருக்கிறது. நடத்தப்படும் கர்மாவில் ஏதாவது ஹிம்ஸை ஏற்பட்டால் அதை நிவர்த்தி செய்ய பிராமண போஜனம் ஏற்பட்டிருக்கிறது. இவைகளுக்கு விரோதமாக செய்யப்பட்ட கர்மா யஜமானனை நசிக்கச் செய்வதுடன் கர்மா செய்யப்பட்ட ராஜ்யத்திற்கும் நாசம் உண்டாகும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

अन्नहीनं दहेद्राष्ट्रं मन्त्रहीनं तु ऋत्विजः ।
आत्मानं दक्षिणाहीनं नास्ति यज्ञसमो रिपुः ॥

யாகம் என்கிற கர்மா யாவரும் செய்யவேண்டியதென்று விதிக்கப்படவில்லை. யாகம் செய்ய அதிகாரம் உள்ளவன் வெகு சுவல்பம். அவர்களிலும் கர்மாவில் பிரவிருத்தி உள்ளவன்தான் கர்மா செய்பவன். இப்படியிருக்க யாவரும் யாகம் செய்யும்படி வேதம் விதித்திருக்கிறதென்றும் சொல்வது சரியல்ல. எல்லா ராஜாக்களையும் ஜெயித்து யாகத்தை நடத்தக்கூடிய சக்கரவர்த்தி அல்

லவோ அசுவமேதயாகம் செய்யவேண்டும். அது யாகங்களுக்குள் சிரேஷ்டமாக சொல்லப்படுகிறது. சக்தியுள்ளவர்கள் அதிகாரத்தினுல் விதிக்கப்பட்ட கர்மாவின் பிரயோகத்தை அறிந்து செய்யவேண்டும். சக்தியற்றவர்களும் அதிகாரம் இல்லாதவர்களும் யாகத்தின் பிரயோகங்களை அறிந்துகொண்டு மானஸிகமான யாகம் செய்யவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நாம் யாகத்தின் மஹிமையையும் யாகம் செய்ய அதிகாரமுள்ளவனுடைய லக்ஷணங்களையும் யாகங்களின் பிரயோஜனத்தையும், செய்யவேண்டிய விதியையும் ஏன் விதிக்கப்பட்டதென்பதையும் அது ஹிம்ஸை முதலிய தோஷங்களுடன் கூடியதா? என்பதைப்பற்றியும் விசாரிப்போம்.

3. தேவர்கள் தேவத்வத்தையடைந்ததும் அஸுரர்களை ஜெயித்து தேவலோகமடைந்ததும் யாகத்தால்தான். சத்துருக்கள் யக்ஞத்தால் மித்திரர்களாவார்கள். ஜகத் பிரதிஷ்டை யக்ஞாதீனமாகவிருப்பதால் எல்லாம் யக்ஞத்தால்தான் சாதிக்கக்கூடியது என்று சுருதி கூறுகின்றது. அந்த யக்ஞம் 3 விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. (1) பலத்தை இச்சிக்காமல் சாஸ்திர விதிப்படி யாகம் செய்யவேண்டும் என்கிற எண்ணத்துடன் மனதை அடக்கி செய்யும் யாகம் ஸாத்விகம், (2) பலத்தை உத்தேசித்து காம்யார்த்தமாக யாகம் செய்வது ராஜஸம், (3) விதியை ஒவ்வாமலும் சரியானபடி அன்னதானம் செய்யாமலும் மந்திர ஹீனமாகவும் தக்ஷிணை ஹீனமாகவும் சிரத்தை அன்னியில் செய்யப்படும் யாகம் தாமஸம். ஞானமடைய சாதனமாக யாகத்தை செய்வது ஸாத்விகம். ராஜாக்களை ஜயிக்கவேண்டும் என்று நினைத்து செய்வது ராஜஸம். மற்றவர்களைக் கொல்ல பிரயோகம் செய்வது தாமஸத்தில் தாமஸம். ராஜஸ தாமஸமான யாகங்கள் செய்யக்கூடா

தென்றும், செய்பவன் தோஷங்களுக்குள்ளாவான் என்றும் தே. பா. ௧. ௧௮. அத். சொல்லப்பட்டிருக்கிறது. பலனை உத்தேசிக்காமல் ஞானம் அடைய சாதனம் கர்மா என்று நினைத்து விதிப்படி நடத்தும் கர்மாவைத்தான் சாஸ்திரங்கள் அனுமோதிக்கின்றன. தர்மத்திற்காகவும் பலத்தை உத்தேசித்தும் பரஹிம்ஸை செய்வதற்காகவும் கர்மா விதிக்கப்படவில்லை. அது நிஷேதிக்கப்படுகிறது.

பலாஸக்தி உள்ள கிருஹஸ்தன் செய்யும் கர்மாவில் ஹிம்ஸை ஏற்படும். எவ்விதம் அக்நிக்கு விறகின் சம்யோகத்தால் தூமத்வம் ஏற்படுகிறதோ அவ்விதமாக ஆஸக்தி என்கிற உபாதி அல்லது தம்பம் முதலியவை ஏற்பட்டால் தோஷயுக்தமாகும். யாகம் செய்ய அதிகாரி யார் என்று விசாரிப்போம்.

यस्य त्रैवार्षिकं धान्यं पर्याप्तं भृत्यवृत्तये ।
अधिकं वापि सिद्ध्येत स सोमं पातुमर्हति ॥
पुण्यान्यन्यानि कुर्वीत श्रद्दधानो जितेन्द्रियः ।
न त्वल्पदक्षिणैर्यज्ञैः यजेताथ कथंचन ॥

சமதமாதி குணத்துடன் கூடியவனாகவும் ஜிதேந்திரியனாகவும், தனிகனாகவும் 3 வருஷத்திற்கு (அல்லது மேலாகவாவது) வேலைக்காரனுக்குச் சம்பளம் கொடுத்து குடும்பரக்ஷணம் செய்யவேண்டிய தான்யத்துடன் கூடியவனும் கிருஹஸ்தாசிரமத்தில் புத்திரன் ஜனித்த பிறகு தலை மயிர் நிரைக்காதவனும் அதாவது வார்த்திக்கியதசை ஆரம்பமாவதற்கு முன்னும் தேகபலமுடையவனும் வித்வானும் புராணம், இதிஹாசம், சாஸ்திரம் முதலியவைகளின் ரஹஸ்யம் அறிந்தவனும், யக்ஞம் செய்யவேண்டுமென்கிற சிரத்தையுடையவனும் விதிக்கப்பட்ட பூர்ணதக்ஷிணையை குறைக்காமல் குடுக்க சக்தியுள்ளவனும் யாகம் செய்ய அதிகாரியாவான். யாகம் செய்வதில் யக்ஞத்திற்குத்

தக்கபடி அன்னதானம் செய்ய வேண்டும். பாகத்தில் கிடைத்த சொத்தைக் கொண்டாவது கிருஷி முதலியது செய்தாவது சூத்ரர்கள் முதலியவர்களிடம் வாங்காமல் யாகம் செய்யவேண்டும்.

सहस्रं भोजयेत्सोमे ब्राह्मणानां शतं पशौ ।
चातुर्मास्येषु सर्वेषु शतं पर्वणि पर्वणि ॥

ஸோமயாகத்தில் 1000 பிராமணர்களும் சாதுர்மாஸ்யம் பசுபந்தம் (வருஷத்திற்கு 3 மாசத்திற்கு ஒரு தடவை) பர்வயக்ஞம் இவைகளில் 100 பிராமணர்களுக்கும் குறைவில்லாமல் அன்னதானம் செய்யவேண்டும். ருத்விக்குகள் சரியாக மந்தர உச்சாரணம் செய்ய சக்தியுள்ள வித்வான்களாகவும் யஜமானன் ருத்விக்குகள் சிரமப்படுவதற்குத் தக்க தக்ஷிணை கொடுக்கக் கூடியவனுகவும் இருக்கவேண்டும். இந்த விதிகளையெல்லாம் கவனிக்காமல் தம்பத்திற்காகவும் பிரயோஜனத்தை உத்தேசித்தும் யாகம் செய்தால் இந்திரியங்கள், ஆயுசு, ஸ்திதி, தனம் முதலியவைகள் நசித்துவிடும் அவன் வசிக்கும் ராஜ்யத்திற்கும் நாசம் ஏற்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. யக்ஞத்தில் செய்யும் பிரயோகங்களை செம்மையாய் அறிந்து கர்மா செய்தால் பலம் ஜாஸ்தியாக ஏற்படக் கூடியது. அவ்விதம் அறியாமலும் விதியை அனுசரிக்காமலும் செய்யும் யாகம் அவனுக்கு சத்துருவைப்போல நாசத்திற்கு ஹேதுவாகும். மேற்சொன்ன லக்ஷணமுள்ளவன்தான் அதிகாரியாவான். பலத்தை உத்தேசித்து யாகம் செய்வது துக்ககரமாகவும் ஏற்படும். தன் தேகத்தில் ஏற்பட்டிருக்கும் மஹோதர வியாதியை நிவர்த்திக்க அம்பரீஷ ராஜன் சுனச்சேபன் என்பவனை நரபசுவாக்கி யாகம் செய்ய ஆரம்பித்ததில் அவனை விடுதலை செய்யும்படி விசுவாமித்திரர் பலவிதமாக வருந்திக் கேட்டும் அரசன் கேட்காததினால் வருண

ப்ரீதியை ஸம்பாதித்துக்கொண்டும் பிறகு வருத்தமடைந்தான் என்றும், ராஜாக்களை ஹிம்ஸித்து ராஜஸூய யாகம் செய்தும் தர்மபுத்திரர் சுகமடையவில்லை என்றும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் விதிப்படி செய்யும் கர்மா பலன் கொடுக்கும்.

(இன்னும் வரும்.)

பி. வி. கிருஷ்ணசாமி அய்யர்.

ஆர்யதர்ம போதினீ.

கடல்புடை சூழ்ந்த இவ்வுலகத்தில் ஜீவன்கள், தேவர், மக்கள், நாற்கால் பிராணிகள் ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன, தாவரம் என்னும் எழுவகைத் தோற்றங்களாகவும், அவைகள் எண்பத்திநான்கு லக்ஷம் ஜீவபேதங்களாகவும், ஸ்தாவர ஜங்கமாத்ம ரூபங்களாகப் பிரிக்கப்பட்டும், அவைகள் முறையே ஓரறிவுமுதல் ஐயறிவு ஈறாக வகுக்கப்பட்டுமிருப்பது யாவருமறிந்ததே. இவ்வித ஜீவான்ம பேதங்களுள் ஜங்கமாத்மகமாயும் ஐயறிவும் பொருந்தியதாயுமுள்ள மானுட ஜன்மமே மற்றுள்ள ஜீவகோடிகளுள் மிகச் சிறப்புற்றுள்ளதென்றுமறிவோம். இதுகாறும் நம் மண்ணுலகிற் பிறந்தவர்களான மானுடர்கள் பலருளராயினும் ஜன்மாந்திரங்களிற் செய்த பாபகர்ம வினைகளுக்கேற்றுக் கூன், குருடு, செவிடு, பேடு முதலிய குரூபாகிருதியான சரீரத்தை யடையாமலும் ஆஜன்மமட்டும் கஷ்ட

துக்கங்களேயே அனுபவியாமலும் ஜன்மாந்தரத்திற் செய்த நல்வினைப் பயனுக்கேற்றவாறு ஸர்வாங்கஸுந்தராகிருதியாக வுத்பவித்து நல்லொழுக்கங்களைக் கைப்பற்றிக் கல்விக்ஞானங்களையடைந்து ஜன்மமேற்றதற்குப் பயனுகப் பரமவேதாந்த தத்துவக்ஞானத்தையடைந்து முக்தியையும் ஜீவாத்மாவே யெக்காலத்திலும் புண்ய கீர்த்திகளால் உயர்வுற்றுய்யுமென்பதையும் நன்கறிவோம்.

இவ்விதம் மானிடப் பிறப்பினையடைந்து முக்திபதமுற்றவர்களைப்பற்றி இங்ஙனம் புகழ்ந்தெழுதப் புகுந்தமைபற்றி இவ்வியாஸத்திற்கு ஆரியதர்ம போதினீ எனப் பெயர் அமைக்கப்பெற்றதென்பாம். சற்றேறக்குறைய விரண்டு யுகங்களுக்குமுன் காவேரிமா நதியின் உத்தர தடத்திற் சோழவள நாட்டில் தேவபுரமெனும் ஒரு பட்டணம் விளங்கியது. அந்நகரில் ஸர்வ வல்லமையும் பெற்ற மனோரூபனென்னும் ஓர் அரசன் நீதிமுறை வழுவாது அரசு செலுத்திவந்தான். அவ்வேந்தனுக்குப் புத்திவத்தமையென்றும் நித்திய கோபினீயென்றும் இரு பாரியைகள் விளங்கினார்கள். அம்மனோரூபனென்னும் அரசன் இவ்விரு பாரியைகளுடனும் மிக்க மனக்களிப்புடன் இல்லற ஸுகங்களை யனுபவித்து வந்தான். சில காலங்களுக்குப் பிறகு இவ்வரசனுக்கு முதல் பத்னியாகிய புத்திவத்தமையினிடத்தில் ஸத்ரூபனென வொரு புதல்வனும், இரண்டாவது களத்திரமாகிய நித்தியகோபினீயினிடத்தில் துரஹங்காரனென்ற ஒரு பிள்ளையும் ஜனித்தார்கள். இம் மனோரூபனெனுமரசனுக்கு நித்யானந்தன், தர்மிஷ்டன், ஸுதமன், ஸுசமன், நித்யதபஸ்வி, யக்ஞப்பிரியன், பிரும்ஹிஷ்டன் என்று எட்டு மந்திரிகளும், நித்ய ஸுகீ, நீரோகன் என விரண்டு வைத்யர்களும், ஸுகாமியென்றொரு தேர்ப்பாகனும் இருந்தார்கள். மற்றும்

இஷ்டகாமி யென்றொரு ரதமும், பஞ்சரூபமென்றொரு குதிரையும், ஆநந்தமயமென்றொரு ஸபையும் விளங்கின. முற்சொன்னவைகளுடன் மனோரூபன் இராஜ்யத்தை நடத்திவரும் நாளில் ஒருஸமயம் ராஜன் தனது மந்திரிகளாற் சூழப்பட்டுத் தன்னிரு பத்னிகளுடன் ஆநந்தமயமென்ற ஸபையின்கண் நவரத்னங்களிழைத்த ஸிம்மாஸனத்தில் வீற்றிருந்து தேசவிசாரணைகள் செய்ப்புகுவான்கருதித் தனதருகாமையில் வீற்றுள்ள முதன் மந்திரியான நித்தியாநந்தரென்பவரை நோக்கி மேல்வருமாறு கேட்கலானன்.

ஹே நித்தியாநந்தரே இதுகாறும் நீவிர் எண்வர்களின் புத்திவிசாலத்தின் கீழ் யென்னலாளப்பட்டு வரும் இப் பூமண்டலத்தினுள் எவ்வித அறிவீனங்களும் யாதொரு குறைவு மன்றி ஸுகமே வாழ்ந்து கொண்டிருக்கின்றதா?

நித்தியாநந்தன், "ஹே! மண்டலாதிபதி, ஸர்வ வல்லமையும் பெற்று எங்கும் நிறைந்து யென்றும் அழிவில்லாத சாச்வதப் பொருளின் திருவருளால் ஒரு குறைவுமின்றி ஸுகமே வாழ்ந்திருக்கின்றது"

மனோரூபன், "ஹே! தர்மிஷ்ட, நம் தேசத்திலுற்ற தர்மங்களனைத்தும் பிழையின்றி நடந்துவருகின்றனவா?"

தர்மிஷ்டன், "ஹே! அரசே! தர்மமே ஓர் உருவங்கொண்டவதரித்துத் தாமிந்தப் பூமியில் வந்திருக்கும்போது தர்மம் குறைவின்றி ஏன் நடக்காது"?

மனோரூபன், "தர்மத்தினல் உலகத்தில் அடைவது யாது?"

தர்மிஷ்டன் "தர்மமே ஸகல லோகங்களையும் நிலைபிஷிடுகிறது. உலகத்தில் தர்மம் செய்பவனே ஜீவர்கள்

அண்டிப் பிழைக்கின்றனர். தர்மத்தினல் பாபமானது போக்கப்படுகிறது. ஸர்வமும் தர்மத்திலேயே பிரதிஷ்டையாக விருக்கின்றன. ஆனதால் தர்மத்தைச் சிரேஷ்டமெனப் புகழ்வார்கள்."

முனே, "ஹே! ஸூதம! நமது ராஜ்யத்தைச் சார்ந்த ஆரண்யங்களில் வாஸஞ்செய்யும் யோகிகள் எப்படி ஸதாத்தியானபரர்களானர்கள்?"

ஸூதமன், "வாக்கு, மனம் இவ்விரண்டிற்கும் எட்டாத பரம்பொருளைக் கண்டு பிடித்து அதனை மனத்தினிடம் நிலையாக்க வேண்டின் ஐம்புலன்களையும் அடக்கிடவேண்டும். அதையே தமமென்பார்கள். தமத்தினல் பாபமயமான அழுக்கு நீங்குகின்றது. தமத்தினலேயே முனிகள் ஸ்வர்க்காதி லோகங்களை அடைந்தார்கள். தமமானது ப்பிராணிகளுக்குக் கஷ்டப் பிரயாஸையாலடையக் கூடியது. ஸர்வமும் தமத்தினல் கூடும். ஆனதால் தமத்தைப் பெரிதென்பார்கள். அவ்விதமான தமமெனும் குணத்தை யடைந்து நமது ஆரண்யவாஸிகள் தியானத்திலமர்ந்துற்றார்கள்."

மனேரூபன், "ஹே! ஸூசம! தமத்தின் பழக்கத்தால் எப்பொழுதும் பழக்கத்திற்கு வரும் பயன் யாது?"

ஸூசமன், "தமமென்கிற குணத்தாலடங்கிய ஐம்புலன்களும், அடங்கிய பின்னர், கோபம், ஸந்தோஷம், ஸுகம் துக்கம், சீதம், உஷ்ணம் முதலான வர்க்கங்களை யுணராது சாந்த குணத்தை யெப்பொழுதும் பற்றி யிருப்பதே தமத்தினல் அடைந்த பயனகும். அன்றியும் சமமென்கிற குணத்தால் சாந்தமடைந்தவர்களே சிவத்தை தொழுகின்றார்கள். சமத்தினலேயே பிரும்மநிஷ்டர்கள் புண்யலோக மடைந்

தார்கள். சமமென்னுங் குணமானதுப் பிராணிக ளுக்குக் கஷ்டப்பிரயாஸையால் ஸாத்யமாகும். சம குணமுண்டானல் ஸர்வலோகங்களும் தன் வசமா கும். ஆனதினலே சமமே பெரிதென்பார் முன் ஞேர். அது சமமெனுங்குணத்தாலடைந்த பல ஞகும்."

மஞே, "ஹே! நித்திய தபஸ்வின்! நமது ராஜ்யத்தில் இல் லறந்துறவறங்களிலுற்ற தபஸ்விகள் ஸம்ஸார பாசங் களிலுற்ற வாசாபாசங்களற்று ஸ்திரமான யோக ஸமாதியிலுற்றுத் தவம்புரிகின்றனர்களா?"

நித்தியதபஸ், "அவ்வண்ணமே செய்து வருகின்றனர்,"

மஞே, "அத்தவத்தால் எவ்விதப் பயன் பெறுவார்கள்?"

நித்தியதபஸ், "தபஸ்ஸினலேயே தேவர்கள் தேவத்வத் தைபடைந்தார்கள். தபஸ்ஸினல் ருஷிகள் ஸ்வர்க் கத்தை யடைந்தார்கள். தபஸ்ஸினலேயே சத்துருக் களையும் அரிஷ்டங்களையும் நீக்கிக்கொள்வாம். இவ்வுல கங்களை ஆண்டவன் ஆக்கவும், அளிக்கவும், அழிக்க வும், சக்தியடைந்தது தவத்தினலேயே. ஸர்வலோகங் களும் தவத்தினலேயே நிலைபெற்று நிற்கின்றன. அக்னி, வாயு, ஸூரியன், சந்திரன், வருணன், இந்தி ரன், முதலான ஸகலமான தேவர்களும் தவத்தின லேயே தத்தம் பதத்தில் ஸ்திரப்பட்டுள்ளார். தவத் தில்லாத்தேவர் தம்பதத்திலிரார். எக்காரியங் களும் தபஸ்ஸினலே முடியுமாதல்பற்றி யெல்லாவற் றிலும் தபஸ்ஸை மேன்மையாக உரைப்பார் பெரி யோர்."

(இன்னும் வரும்.)

விசுவநாத கனபாடிகள்.